(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

8 சைவசமய பாடப்பரீட்சை : 2020

தரம் எட்டு



nselva.com

காலம் அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ)மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. சமணர்களின் குருவாக இருந்தவர்.
   1) வீரபாகு 2) பாண்டியன் 3) ஞானசம்பந்தர் 4) தர்மசேனர்
2. சிவபெருமான் இமய மலைக்குச் சென்று பார்வதியைத் திருமணம் செய்து கொண்டதாகக் கூறப்படும் தினம்
   1) பங்குனி உத்தரம் 2) ஆனி உத்தரம்
   3) வைகாசி விசாகம் 4) ஆடிப்பூரம்
3. ஆலயமானது மனித உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுகின்றது அதில் மகாமண்டபம் எதைக் குறிக்கிறது.
   1) கருவறை 2) வயிறு 3) மார்பு 4) கழுத்து
4. இரு வாரங்களுக்கு ஒருமுறை நிகழ்வது.
   1) அமாவாசை 2) சோமவாரம் 3) திருவாதிரை 4) பிரதோஷம்
5. இலிங்கோற்பவ காலம் என்பது.
   1) மாலை 5.30 முதல் 6.30 வரை 2) இரவு 9.00 முதல் 10.50 வரை
   3) இரவு 11.30 முதல் 12.15 வரை 4) அதிகாலை 2.30 முதல் 4.30 வரை
6. அட்டாங்க நமஸ்காரம் செய்யும் போது எத்தனை அங்கங்கள் நிலத்தில் பொருத்தும்படி வணங்க வேண்டும்.
   1) 7 2) 8 3) 9 4) 5
7. சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாள்.
   1) தைப்பொங்கல் 2) புதுவருடப்பிறப்பு 3) தீபாவளி 4) கார்த்திகைத் தீபம்
8. பகலில் வேட்டையாடி ஊனமுது தேடி இறைவனுக்கு திருவமுது செய்தவர்.
   1) அருணகிரி நாதர் 2) திண்ணனார்
   3) காடன் 4) இராவணன்
9. ''கற்றாங்கு எரியோம்பி'' என்ற திருப்பாடலின் பண்.
   1) குறிஞ்சி 2) கொல்லி 3) பஞ்சமம் 4) நட்டராகம்
10. சமண சமயத்தை தழுவியிருந்த பாண்டிய மன்னனை மீண்டும் சைவனாக்கியவர்.
    1) சுந்தரர் 2) அப்பர் 3) ஞானசம்பந்தர் 4) வீரமாமுனிவர்
11. சமயாசாரியர்களின் பெருமையை எமக்கு உணர்த்திய பெருங்குரவர்
    1) திருமூலர் 2) நம்பியாண்டார் 3) சேக்கிழார் 4) சோழன்

12. நாட்டார் தெய்வம் மதுரை வீரன் பிறந்த இடம்.
    1) திருவரங்கம் 2) மதுரை
    3) யாழ்ப்பாணம் 4) காசி
13. ''பாரொடு விண்ணாய்'' என்ற திருப்பாடலை அருளியவர்.
    1) மணிவாசகர் 2) சேக்கிழார்
    3) சேந்தனார் 4) ஔவையார்
14. தேவார முதலிகளின் தொகை
    1) 05 2) 03 3) 04 4) 63
15. வேத சிரசு என்று அழைக்கப்படுவது.
    1) தேவாரம் 2) உபநிடதங்கள் 3) ஆத்திசூடி 4) அபிராமிஅந்தாதி
16. மாணிக்க கங்கையை தீர்த்தமாகக் கொண்ட ஆலயம்
    1) முன்னேச்சரம் 2) கதிர்காமம்
    3) வல்லிபுர ஆழ்வார் 4) உகந்தை முருகன்
17. எட்டாந் திருமுறையில் அடங்கும் நூல்
    1) தேவாரம் 2) திருவாசகம்
    3) திருப்பல்லாண்டு 4) திருமந்திரம்
18. திருநாவுக்கரசரின் குருபூசை தினம்.
    1) வைகாசிமூலம் 2) சித்திரைச் சதயம்
    3) ஆடிச்சோதி 4) ஆனி மகம்
19. சோதிப்பிழம்பைத் தேட அன்னப்பறவை உருவம் கொண்டவர்.
    1) விஷ்ணு 2) பிரம்மா 3) முருகன் 4) கருடன்
20. ஆணவம், கன்மம், மாயை, எனப்படுவது.
    1) முப்புரங்கள் 2) மும்மலங்கள் 3) முக்கனிகள் 4) முச்சுடர்கள்
21. திருப்புகழ் பாடியவர்.
    1) கச்சியப்பர் 2) காரைக்கால் அம்மையார்
    3) ஔவையார் 4) அருணகிரிநாதர்
22. மூதுரை எனும் நீதி நூலை பாடியவர்.
    1) பட்டினத்தார் 2) ஔவையார் 3) திருவள்ளுவர் 4) தர்மசேனர்
23. சிவபெருமானுக்குரிய கொடி.
    1) சிங்கக்கொடி 2) அன்னக்கொடி 3) சேவல்கொடி 4) நந்திக்கொடி
24. மகாவிஷ்ணு நரகாசுரனை அழித்து மக்களின் துன்பங்களை நீக்கிய தினம்.
    1) தைப்பொங்கல் 2) வருடப்பிறப்பு 3) ஆடிப்பிறப்பு 4) தீபாவளி
25. உன்னஸ்கிரி என்று அழைக்கப்படும் ஆலயம்.
    1) கதிர்காமம் 2) வல்லிபுரஆழ்வார்
    3) முறிகண்டி விநாயகர் 4) உகந்தை முருகன்

(25 புள்ளிகள்**)**

(ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சக்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?

   .....

2. சரஸ்வதி பூசையின் போது ஓதத்தக்க நூல் யாது?

   .....

3. திருமுறைகளின் மொத்த எண்ணிக்கை?

   .....

4. தமிழ் வேதத்தை அன்புடனே நியமமாக ஓதுபவர் யாது பெறுவர்?

.....

5. திருநீறு தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் யாது?

.....

6. புண்ணியங்கள் ஆவன யாவை?

.....

7. திருத்தொண்டர் தொகை பாடியவர் யார்?

.....

8. உபநிடதங்களின் மூல நூல்கள் எந்த மொழியில் உள்ளது?

.....

9. ''சிவ குரு'' என்று அழைக்கப்படுவர் யார்?

.....

10. திருநாவுக்கரசர் முதன் முதலில் பாடிய தேவாரம் எது?

.....

11. எமது முன்னறி தெய்வங்களாக கருதப்படுவோர் யாவர்?

.....

12. ஓம் எனும் பிரணவத்துக்குரியவர் யார்?

.....

13. திருமூலரின் திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?

.....

14. நவராத்திரி விரதத்தின் முதல் மூன்று நாட்களில் வழிபடப்படும் சக்தி எது?

.....

15. மங்கையர்கரசியாரின் கணவர் யார்?

.....

(15 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "பெருகலாம் தவம் ....."
2. "பண்ணின் நேர்மொழி ....."
3. "நீள நினைந்தடி ....."
4. "பாரொடு விண்ணாய் ....." **(2x7 = 14** புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை எழுதுக.

1. "இனிய உளவாக ....."
2. "கொன்றன்ன இன்னா ....."
3. "சொற்கோட்டம் இல்லது ....."
4. "வாணிகம் செய்வார்க்கு ....."
5. "கேடும் பெருக்கமும் ....."
6. "அடக்கம் அமரருள் ....." **(6x1 = 6** புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1.
1. கோயில் கோபுரத்தில் அமையும் சிற்பங்கள் எதனைச் சுட்டுகின்றன.
2. ஆலயங்களில் நடைபெறும் மூன்று கிரியைகளைத் தருக.
3. உத்தலாகலரின் மகன் பெயர் என்ன?

(10 புள்ளிகள்**)**

2.
1. எமது வாழ்வில் ஒருமுறை மட்டுமே இடம்பெறும் இரு நிகழ்வுகளைத் தருக?
2. ஆலயங்களில் பெண்கள் செய்யும் நமஸ்காரம் யாது?
3. தில்லை மூவாயிரவர் எனச் சிறப்பிக்கப்படும் அந்தணர்கள் வாழுமிடம் எது?

(10 புள்ளிகள்**)**

3.
1. திண்ணனார் முதல்முறையாக வேட்டைக்கு சென்ற போது அவருடன் சென்ற தோழர்கள் பெயர்களைத் தருக.
2. காளத்தியப்பரை நாள்தோறும் சிவாகம விதிப்படி பூசை செய்தவர் யார்?
3. திருமறைக் காட்டின் கதவை பதிகம் பாடி மூடியவர் யார்?

(10 புள்ளிகள்**)**

4.
1. பாரம்பரிய பலகாரங்கள், அறுசுவை உணவு உண்ணல், கைவிசேடம் பெறுதல் போன்றவை இடம்பெறும் பண்டிகை எது?
2. ''நமச்சிவாய வாழ்க" என்ற பாடல் யாரால் பாடப்பட்டது?
3. பாலை நிலத்தை நெய்தல் நிலம் ஆகும்படி பாடியவர் யார்?

(10 புள்ளிகள்**)**

5.
1. இராமனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்ட காரணத்தை தருக.
2. கண்ணகியம்மன் வழிபாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்திய மன்னன் யார்?
3. குண்டையூர்க்கிழாருடன் தொடர்புடைய நாயனார் யார்?

(10 புள்ளிகள்**)**

6.
1. உபவாசம் என்றால் என்ன?
2. இலங்கை வேந்தன் இராவணனிடமிருந்த விமானத்தின் பெயர் யாது?
3. சிவபெருமான் ''ஆலமுண்ட கண்டன்" என்று எதற்காக அழைக்கப்படுகிறார்?

(10 புள்ளிகள்**)**